# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 03 புதன்கிழமை 19.07.2023 கதிர் 32



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


# கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை வைத்தியர்களின் போராட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு வைத்தியர்கள் இன்று காலை 8 மணி முதல் 24 மணித்தியால அடையாள பணிப்புறக்கணிப்பை ஆரம்பித்த நிலையில், குறித்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வைத்தியசாலையில் பெண் விசேட வைத்தியர் ஒருவரின் தன்னிச்சையான செயற்பாடுகளுக்கு எதிராகவே தாம் பணிப்புறக்கணிப்பை ஆரம்பித்ததாக தெரிவித்திருந்த வைத்தியர் சம்மில் விஜேசிங்க, பெண் விசேட வைத்தியர் ஒருவரின் பொருத்தமற்ற மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தையினால் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

அந்த மருத்துவமனையின் பணிப்பாளர், குறித்த பிரச்சினைக்கு தீர்வுகாண தவறியதால், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் முறையிட்டு ஒரு வாரத்திற்குள் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என தெரிவித்த அவர், இதுவரை மூன்று வாரங்கள் கடந்துள்ள நிலையில், தீர்வு காணப்படவில்லையெனவும் தெரிவித்திருந்தார்.

குறித்த விசேட வைத்திய அதிகாரி தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன எழுத்து மூலமாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்திற்கு அறிவித்ததையடுத்தே இந்த பணிபுறக்கணிப்பு நடவடிக்கை நிறைவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

## வழிபாட்டுத் தலங்களுக்கான அளவீடுகளை தயாரிக்க அரசு தயார் – அமைச்சர் விதுர



நாட்டின் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர்களின் எல்லைக்குள்ளும் இருக்கக்கூடிய வழிபாட்டுத் தலங்களுக்கான அளவீடுகளைத்தயாரிக்க இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்திருப்பதாக புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மகாநாயக்கர்கள் மற்றும் ஏனைய மதத் தலைவர்களின் அனுமதியுடன் இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் உள்ள வழிபாட்டுத்தலங்கள் மற்றும் சொத்துக்கள் தொடர்பான 2➤

## பாகிஸ்தானுக்கான உயர்ஸ்தானிகராக அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன நியமனம்



பாகிஸ்தானுக்கான உயர்ஸ்தானிகராக அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் கடற்படைத் தளபதியாகவும் பாதுகாப்புப் படைகளின் பிரதானியாகவும் செயற்பட்டுள்ளார்.

குறித்த பதவிகளில் இருந்து ஓய்வு பெற்றதன் பின்னர், அவர் பெட்ரோலிய கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளராகவும் கடமையாற்றியிருந்தார். 2➤

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விண்ணப்ப முடிவுத் திகதி அறிவிக்கப்பட்டது

2023 ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான இணையவழி விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான காலம் எதிர்வரும் 28 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இதேவேளை, 2022 ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் அடுத்த மாத நடுப்பகுதியில் வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த முன்னதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரணிலும் ராஜபக்சக்களும் வேறுவேறல்ல ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்!

### ஜே.வி.பி. சந்திரசேகரன் விமர்சனம்

ராஜபக்சக்களின் விருப்பத்தை நிறைவேற்றவும் ராஜபக்சக்களை காப்பாற்றவுமே ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகியுள்ளார், என மக்கள் விடுதலை முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

ரணில் என்பதும் ராஜபக்சக்கள் என்பதும் இரண்டல்ல, அவர்களின் பயணமும் இரண்டல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் தமிழக் கட்சிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது, தான் ரணில் ராஜபக்ச அல்ல ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே யாழில் உள்ள கட்சி அலுவலகத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது சந்திரசேகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.




ரணில் விக்ரமசிங்க, ராஜபக்சக்களைப் 2➤

## மிக வேகமான மீட்சியில் இலங்கை செல்கிறது உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர்



இலங்கை பொருளாதார மீட்சியில் விரைவான முன்னேற்றம் கண்டுள்ளது, எனவும் இலங்கை சரியான திசையில் சென்று கொண்டிருக்கிறது எனவும் உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பாரிஸ் கடாட் சேவோர்ஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில், இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 70 சதவீதமாக இருந்த பணவீக்கம் தற்போது 12 சதவீதமாக குறைந்துள்ளதாகவும் மேலும் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த ஆண்டு இலங்கையர் எதிர்கொண்ட 2➤

## ஊழல் தடுப்பு மசோதா நாடாளுமன்றில் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது

கடந்த ஜூலை 6 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட ஊழல் தடுப்புச் சட்டமூலம் 193 திருத்தங்களுடன் இன்று காலை நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா உட்பட பல தரப்புகள் சட்டமூலத்தின் உட்பிரிவுகளுக்குள் உள்ள முக்கிய பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தியதால், இந்தச் சட்டமூலம் பல சர்ச்சைகளுக்குள்ளாகியிருந்தது.

இது தொடர்பாக ஒரு மனுவை தாக்கல் செய்த ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா, ஊழல் தடுப்பு மசோதாவின் உட்பிரிவு 28 இன் மூன்றாம் பிரிவு, 161 மற்றும் 119 உட்பட மொத்தம் 37 சரத்துகளை சவாலுக்கு உட்படுத்தியிருந்தது.

இது கருத்துச் சுதந்திரம், மற்றும் 2➤

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

## நீர்கொழும்பு விஜயரத்தினம் மத்திய கல்லூரியில் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் நிகழ்ச்சி



அவுஸ்திரேலியாவிலிருந்து இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் உதவியைப் பெற்றுவரும் நீர்கொழும்பு விஜயரத்தினம் மத்திய கல்லூரி மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவும் தகவல் அமர்வும் கடந்த 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கல்லூரியின் நூல் நிலைய மண்டபத்தில், அதிபர் திரு. ந. புவனேஸ்வரராஜாவின் தலைமையில் நடைபெற்றது.

கடந்த பலவருடங்களாக, கல்வி நிதியத்தின் உதவியைப் பெற்றுவரும் மாணவர்களுக்கான இந்த ஒன்றுகூடலில், இம்முறை நிதியத்தின் தலைவர் திரு. லெ. முருகபூபதியும், ஆசிரியர்களும் உதவி பெறும் மாணவர்களின் தாய்மாரும் கலந்துகொண்டனர்.

கல்வி நிதியத்தின் தொடர்பாளர் ஆசிரியை செல்வி லோஜினியின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இந்நிகழ்ச்சி, இக்கல்லூரியின் முதலாவது தலைமை ஆசிரியர் அமரர் பண்டிதர் க. மயில்வாகனன் அவர்களின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மங்கள விளக்கேற்றப்பட்டு தொடங்கப்பட்டது.

தமது தந்தையை இழந்து வறுமைக் கோட்டின் கீழ் கல்வியை தொடரும் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு அவுஸ்திரேலியாவிலிருந்து கடந்த 36 வருடங்களுக்கும் மேலாக உதவி வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் உதவியை பெற்ற விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் சிலர், பல்கலைக்கழகம் பிரவேசித்து பட்டதாரிகளாகியிருக்கும் அதேசமயம், ஆசிரியர்களாகவும் பரீட்சைத் திணைக்கள உதவி ஆணையாளராகவும் பதவிபெற்று பணியாற்றி வருகிறார்கள் என்ற நற்செய்தி இந்த மாணவர் ஒன்றுகூடலில் தெரிவிக்கப்பட்டது.

கல்லூரியின் முன்னாள் மாணவர்களான திருமதிகள் மதுரா சிவசங்கர், பரிமளஜெயந்தி நவரட்ணம், சூரியகுமாரி ரீதரன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். கல்வி நிதியத்தின் பணிகளைச் சித்திரிக்கும் ஆவணப்படமும் காண்பிக்கப்பட்டது.




## அட்டாளைச்சேனை சமுர்த்தி பயனாளிக்கு வீட்டு லொத்தர் சீட்டிழுப்பில் இரண்டு லட்சம்

(எம் எப். நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சமுர்த்தி பயனாளி ஒருவருக்கு வீட்டு லொத்தர் சீட்டிழுப்பு மூலம் இரண்டு லட்சம் ரூபாய் கிடைக்கப் பெற்றது. அதற்கான காசோலையை முகாமைத்துவ பணிப்பாளர் ரி.பரமானந்தம் அவர்கள் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ எம். ஹமீத், கருத்திட்ட முகாமையாளர் எஸ் எல். அஸிஸ், விடய உத்தியோகத்தர் ஏ எஸ் எம். உனைஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## நாட்டில் 24 மணித்தியாலங்களில் டெங்கினால் இருவர் உயிரிழப்பு!

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் இரண்டு டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 53700 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 36 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்தில் 26,702 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாகவும் டெங்கு அபாய வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ள வைத்திய பிரிவுகளின் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளதாகவும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (த)

## பாகிஸ்தானுக்கான உயர்ஸ்தானிகராக ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர், கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வெள்ளை வானில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரைக் கடத்திய விவகாரத்தில் பிரதான சந்தேக நபரான நேவி சம்பத்திற்கு அடைக்கலம் கொடுத்தமை தொடர்பில் குற்றச்சாட்டுக்கு உள்ளாகி, கடந்த 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வழிபாட்டுத் தலங்களுக்கான அளவீடுகளை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்களைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும், எதிர்காலத் தில் மதஸ்தலங்கள் பதிவு செய்யப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ரணிலும் ராஜபக்சக்களும் வேறுவேறல்ல ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாக்கும் நாய்க்குட்டியே எனவும், இவர்கள் இரு தரப்பும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் எனவும் அவர் விமர்சித்துள்ளார்.

அதேவேளை, 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற போது, பட்டப்பகலில் மத்திய வங்கியை சூறையாடியவர். நாட்டின் ஆதனத்தை, அதாவது அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்றவர். நாட்டை நாசமாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்தவர் ரணில் விக்ரமசிங்க. அவரை விரட்டவேண்டும், எனத் தெரிவித்தே ராஜபக்சக்கள் தேர்தலில் வாக்குகளைச் சேகரித்தனர் எனவும் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

தற்போது ரணில் ராஜபகசக்களுக்கு எதிராக மக்கள் அதிருப்தியடைந்து பாரிய அதிர்வலைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறான எதிர்ப்புக்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், மீண்டும் ஜனாதிபதியாவதற்கு வாய்ப்பு உள்ளதா? என்ற நோக்கிலும் ஜே.ஆர்.ஜெயவர்தனவின் செயற்பாட்டைப் பரீட்சித்துப் பார்க்கும் மோசமான ஒரு நபராகவே ரணில் இருக்கின்றார் எனவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

## மிக வேகமான மீட்சியில் இலங்கை செல்கிறது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாரிய போராட்டங்களின் விளைவாக பல சிரமங்களை தாம் தனிப்பட்ட முறையில் அனுபவித்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனினும், அந்த இடத்தில் இருந்து இலங்கை வேகமாக மீண்டுள்ளதுடன், நிலைமை மேலும் முன்னேற்றமடைவதற்கான தெளிவான அறிகுறிகள் தென்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இலங்கை முழுமையாக மீளவில்லை எனவும், இந்த வரலாறு மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஏழை மற்றும் நலிந்த மக்களை உயர் நிலைக்கு கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## ஊழல் தடுப்பு மசோதா நாடாளுமன்றில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் அடிப்படைகளைப் பாதிப்பதாக அமையலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், ஊழல் தடுப்புச் சட்டமூலத்தில் திருத்தம் செய்வதற்கான முன்மொழிவுகளை பெண்நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவும் சமர்ப்பித்திருந்தது.

மசோதாவின் சில சரத்துக்கள் அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானவை என்றும், எனவே, திருத்தங்களுக்குப் பிறகு அது தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

உச்ச நீதிமன்றத்தின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்கள் சட்டமூலத்தில் மேற்கொள்ளப்படுமாயின், மேற்படி முரண்பாடுகள் களையப்படும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்திருந்தார்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# மாவடி கந்தசுவாமி ஆலய ஆடிவேல் விழா கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பம்

( வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மாவடி கந்தசுவாமி ஆலய வருடாந்த ஆடி வேல் விழா உற்சவத்தின் முதல் நாள் கொடியேற்றம் நேற்று செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

முன்னதாக பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலயத்தில் இருந்து விசேட பூசையுடன் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

அடியார்களின் அரோகரா கோசத்துக்கு மத்தியில் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ கோவர்த்தன சர்மா முன்னிலையில் கொடி ஏற்றப்பட்டது.

ஆடிவேல் விழா உற்சவம் தொடர்ந்து 13 நாட்கள் இடம்பெற்று ஓகஸ்ட் 2 ஆம் தேதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது.



# வங்கிக் கணக்கு திறப்பதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கி வைப்பு



(எம்.எப். நவாஸ்)

அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகத்தில் அஸ்வெசும நலன் புரித் திட்டத்தில் உள்வாங்கப்பட்ட அட்டாளைச்சேனை, பாலமுனை, திராய்க்கேணி, ஒலுவில் தீக வாப்பி போன்ற பிரதேசங்களில் உள்ள அஸ்வெசும பயனாளிகளுக்கான வங்கிக் கணக்கு திறப்பதற்கான அனுமதிப்பத்திரத்தை கிராம நிர்வாக அதிகாரி ஏ எல்.ஜௌபர் வழுங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.ஜெயகரன், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.எல்.எம்.ரனீஸ், அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். இஸட். அஸ்வர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பமானது உகந்தை மலை முருகன் ஆலய ஆடிவேல் விழா



( வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தை மலை முருகன் ஆலய வருடாந்த ஆடி வேல் விழா உற்சவத்தின் முதல் நாள் கொடியேற்றம் நேற்று செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

காலை 10.30 மணியளவில் வசந்த மண்டபச் சிறப்புப் பூசையையடுத்து ஆலய வண்ணக்கர் டி.எம்.சுதுநிலமே திசாநாயக்க கொடிச்சீலையை சிரசில் வைத்து தாங்கிவந்தார்.

கொடியேற்றத்திருவிழா ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

ஆடிவேல் விழா உற்சவம் தொடர்ந்து 13 நாட்கள் இடம்பெற்று ஓகஸ்ட் 2ஆம் தேதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவடையவிருக்கின்றது.



# அமெரிக்காவில் இழுவைப் படகு கவிழ்ந்து 18,000 லீற்றர் டீசல் ஆற்றில் கொட்டியது



அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் உள்ள டென்னசி ஆற்றில், எரிபொருளை ஏற்றிக் கொண்டு சென்ற இழுவைப் படகு கவிழ்ந்ததில், சுமார் 18,000 லீற்றர் டீசல் ஆற்றில் கொட்டியுள்ளது.

இதனால், மக்பார்லாண்ட் பூங்காவைச் சுற்றியுள்ள கரையோரப் பகுதிகளில் டீசல் மிதக்கும் நிலையில், பொதுமக்கள் அங்கு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்திகதல் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்காக, ஆற்றில் கசிந்த டீசலை அகற்றும் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## ஈரானில் மீண்டும் வரும் ஹிஜாப் சட்டம் போராடினால் தேர்தலில் களமிறங்கத் தடை

ஹிஜாப் சட்டத்தை மீண்டும் கடுமையாக அமுல்படுத்துவதற்கு ஈரான் அடிப்படைவாத அரசு தீர்மானித்துள்ளது.

மஹாசா அம்மினி என்ற இளம் பெண் ஹிஜாப் கட்டாயப்படுத்தப்படுவதற்கு எதிராகப் போராட்டம் நடத்தியபோது ஈரானிய பொலிஸாரால் தாக்கப்பட்டு உயிரிழந்தார்.

மேலும், ஹிஜாப் கட்டாயச் சட்டத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்திய பல பெண்கள் தாக்கப்பட்டும் பாலியல் வன்முறைகளுக்கு ஆளாக்கப்பட்டும், சிறைப்படுத்தப்பட்டும் துன்பம் அனுபவித்ததாக புகார் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து கடந்த 10 மாதங்களாக ஹிஜாப் சட்டம் நடைமுறைப்படுத்தப் படாமல் இருந்தது. தற்போது மீண்டும் அச்சட்டத்தை அமுல்படுத்த ஈரான் அரசு மும்மரமாகச் செயற்பட்டு வருகின்றது.

ஈரானிய அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபடுவோர் தேர்தலில் களமிறங்குவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால், அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள தேர்தலுக்கு, போராட்டத்தில் ஈடுபடுவோர், தங்கள் வேட்பு மனுக்களை சமர்ப்பித்தால் அது நிராகரிக்கப்படலாம் என்ற அச்சத்தில் பலர் போராட்டங்களில் ஈடுபடுவதற்குத் தயக்கம் காட்டிவருவதாக ஈரான் செய்திகள் தெரிவிக்கின்றன. (மி)

ஈரானில் மீண்டும் வரும் ஹிஜாப் சட்டம் போராடினால் தேர்தலில் களமிறங்கத் தடை

ஹிஜாப் சட்டத்தை மீண்டும் கடுமையாக அமுல்படுத்துவதற்கு ஈரான் அடிப்படைவாத அரசு தீர்மானித்துள்ளது.

மஹாசா அம்மினி என்ற இளம் பெண் ஹிஜாப் கட்டாயப்படுத்தப்படுவதற்கு எதிராகப் போராட்டம் நடத்தியபோது ஈரானிய பொலிஸாரால் தாக்கப்பட்டு உயிரிழந்தார்.

மேலும், ஹிஜாப் கட்டாயச் சட்டத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்திய பல பெண்கள் தாக்கப்பட்டும் பாலியல் வன்முறைகளுக்கு ஆளாக்கப்பட்டும், சிறைப்படுத்தப்பட்டும் துன்பம் அனுபவித்ததாக புகார் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து கடந்த 10 மாதங்களாக ஹிஜாப் சட்டம் நடைமுறைப்படுத்தப் படாமல் இருந்தது. தற்போது மீண்டும் அச்சட்டத்தை அமுல்படுத்த ஈரான் அரசு மும்மரமாகச் செயற்பட்டு வருகின்றது.

ஈரானிய அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபடுவோர் தேர்தலில் களமிறங்குவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால், அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள தேர்தலுக்கு, போராட்டத்தில் ஈடுபடுவோர், தங்கள் வேட்பு மனுக்களை சமர்ப்பித்தால் அது நிராகரிக்கப்படலாம் என்ற அச்சத்தில் பலர் போராட்டங்களில் ஈடுபடுவதற்குத் தயக்கம் காட்டிவருவதாக ஈரான் செய்திகள் தெரிவிக்கின்றன. (மி)

## பாகிஸ்தான் நாடாளுமன்று கலைப்பு? அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில்

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதியோடு முடிவுக்கு வருகின்றது.

தேர்தலுக்கு முன்பாக தற்போதைய நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்றும், ஒகஸ்ட் 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைக்க, நாட்டின் முக்கிய கட்சிகளான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியும், பாகிஸ்தான் மக்கள் கட்சியும் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



இந்த நிலையில், நாடாளுமன்றத்தைக் கலைக்கும் திகதி இன்னும் முடிவாகவில்லை எனவும், உரிய ஆலோசனைக்குப் பிறகு அதிகாரப்பூர்வமாக அரசு தனது முடிவை அறிவிக்கும் எனவும் பாகிஸ்தான் தகவல் தொடர்பு அமைச்சர் மரியம் அவுரங்கசீப் தெரிவித்துள்ளார். (மி)

## மிகவும் சக்திவாய்ந்த கடவுச்சீட்டுகளின் பட்டியலில் முதலிடத்தில் சிங்கப்பூர்



ஹென்லி பாஸ்போர்ட் இன்டெக்ஸ் என்ற நிறுவனம் உலகின் மிகவும் சக்திவாய்ந்த கடவுச்சீட்டுகளின் பட்டியலினை வெளியிட்டுள்ளது.

அதன்படி, 192 நாடுகளுக்கு விசா இல்லாத அணுகலை அனுமதிப்பதால், சிங்கப்பூர், ஜப்பானைப் பின்தள்ளி உலகின் அனைத்துக் கடவுச்சீட்டுக்களிலும் மிகவும் சக்திவாய்ந்ததாக மாறியுள்ளது.

ஜெர்மன், இத்தாலி, ஸ்பெயின் ஆகிய மூன்று நாடுகளும் இந்தப் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளன.

இலங்கை, லிபியாவுடன் 95 ஆவது இடத்தைப் பகிர்ந்துகொண்டுள்ளது. இலங்கைக் கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் 41 நாடுகளுக்கு விசா இன்றிப் பயணம் செய்ய முடியும்.

சர்வதேச விமானப் போக்குவரத்துக் கழகத்தின் தரவை அடிப்படையாகக் கொண்ட இந்தக் குறியீடு, உலகெங்கிலும் உள்ள இடங்களுக்கான விசா இல்லாத அணுகலை அளவிடுகிறது.

சிங்கப்பூர் குடிமக்கள் உலகெங்கிலும் உள்ள 227 பயண இடங்களில் 192 இடங்களுக்கு விசா இல்லாத அணுகலை அனுபவிக்க முடியும்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக முதலிடத்தில் இருந்த ஜப்பான், உலகெங்கிலும் உள்ள 189 நாடுகளுக்கு விசா இல்லாத அணுகலுடன் மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டது. இது ஒஸ்திரியா, பின்லாந்து, பிரான்ஸ், லக்சம்பேர்க், தென் கொரியா மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளுடன் தனது நிலையைப் பகிர்ந்துகொள்கிறது.

இலங்கைக் கடவுச்சீட்டு, 2022 இல் 103 வது இடத்திலும் 2021 இல் 107 வது இடத்திலும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

முன் விசா இல்லாமல் நுழைய அனுமதிக்கும் நாடுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்தக் குறியீடு நாடுகளை வரிசைப்படுத்துகின்றது.

ஆப்கானிஸ்தான், வட கொரியா, பப்புவா நியூ கினியா மற்றும் துர்க்மெனிஸ்தான் ஆகியவை விசா இல்லாத அணுகலை அனுமதிப்பதில்லை.

57 நாடுகளுக்கு விசா இல்லாத அணுகலுடன் டோகோ மற்றும் செனகல் ஆகியவற்றுடன் இந்தியா 80 ஆவது இடத்தில் உள்ளது.

பத்தாண்டுகளுக்கு முன்பு தரவரிசையில் முதலிடத்தில் இருந்த அமெரிக்கா, இரண்டு இடங்கள் சரிந்து எட்டாவது இடத்திற்கு வந்தது.

பிரெக்சிட் - சரிவுக்குப் பிறகு, இங்கிலாந்து இரண்டு இடங்கள் முன்னேறி நான்காவது இடத்தைப் பிடித்தது.

ஆப்கானிஸ்தான், யேமன், பாகிஸ்தான், சிரியா, ஈராக் ஆகியவை கடைசி ஐந்து இடங்களைப் பிடித்துள்ளன. (மி)

## மீண்டும் தலை தூக்கும் தீவிரவாதம் எச்சரிக்கை விடுத்தது பிரித்தானியா

அல்கொய்தா ஐ எஸ் உள்ளிட்ட சர்வதேச தீவிரவாத இயக்கங்கள் மீண்டும் தலைதூக்கி வருவதாக பிரித்தானியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

தீவிரவாத எதிர்ப்பு வியூகம் பற்றி புதிய அறிவிப்பை பிரித்தானிய அரசு வெளியிட்டுள்ளது.

பிரித்தானியாவில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பேசிய அந்த நாட்டு உள்துறை அமைச்சர் சுவெல்லா பிரேவ்மன், பிரித்தானியா இப்போது உள்நாட்டுத் தீவிரவாதத்தை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

கணிப்பதற்குச் சாத்தியப்பாடுகள் குறைவாகவும் புலனாய்வு செய்து விசாரணைகளை நடத்தக் கடுமையாகவும் இந்தத் தீவிரவாதம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தீவிரவாதம் உச்சத்தில் இருந்தது போல இப்போது இல்லை என்ற போதும், அல்கொய்தா ஐ எஸ் போன்ற இயக்கங்கள் மீண்டும் எழுச்சி பெற்று வருவதாக சுவெல்லா பிரேவ்மன் தெரிவித்துள்ளமை கவனிக்கத்தக்கது. (மி)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா இன்று ஆரம்பம்


















யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா இன்று ஆரம்பமாகியுள்ளது. பல்கலைக்கழக வேந்தர் வாழ் நாள் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில், பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் இன்று முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை மூன்று நாள்களில் 8 அமர்வுகளாக இடம்பெறவுள்ள இந்தப் பட்டமளிப்பு விழாவில் 2, 278 பேர் பட்டங்களையும் தகைமைச் சான்றிதழ்களையும் பெறவுள்ளனர்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில், உயர் பட்டப் படிப்புகள் பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம், சேர் பொன் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடம், கலைப்பீடம், பொறியியல் பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம்,  மருத்துவ பீடம், தொழில்நுட்பப் பீடம், இந்துக் கற்கைள் பீடம், சித்த மருத்துவ அலகு மற்றும் வவுனியா வளாகத்தைச் (தற்போதைய வவுனியா பல்கலைக்கழகம்) சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில் நுட்பக் கற்கைகள் பீடங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் வழங்கப்படும் வெளிவாரிப் பட்டங்களைப் பெறும் பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்படுகின்றன.





அத்துடன், சகல பட்டக் கற்கைநெறிகளுக்குமாக 32 தங்கப்பதக்கங்களும், 10 புலமைப்பரிசில்களும், 25 பரிசில்களும் வழங்கப்படுன்றன. மேலும், ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் மதிப்புமிக்க பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப் பதக்கத்தை பீடமட்டத்தில் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், கலைப்பீடம் மற்றும்  மருத்துவ பீடத்தைச் சேர்ந்த மூவரும், பல்கலைக்கழக மட்டத்தில் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவரும் பெறவிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.07.2023இல் வெளியிடப்பெற்றது.